2013 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் காலம்தான் தமிழகத்திற்குப் பொற்காலம் என்பதனை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும் குறிப்பாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறார்களோ, அப்பொழுதெல்லாம் சாதாரண மக்கள், ஏழையெளியவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள். அந்தவகையிலேதான் பொது விநியோகத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வருகிறபோதெல்லாம் செம்மைப்படுத்தப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உரியவர்களுக்கு பொருள் கிடைப்பதற்கும், சரியான எடையோடு பொருள் கிடைப்பதற்கும், குறித்த காலத்திலே கிடைப்பதற்கும் உறுதி செய்வது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்கிற அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள் கேட்டுக்கொண்ட கோரிக்கைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும் என்பதனை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 417, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

417—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***21324—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள நலிவடைந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2013 மே 7

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள நலிவடைந்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

முற்பகல் 10–40

திரு வெ. பொன்னுப்பாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஆண்டாள் அவதரித்த புண்ணிய பூமி. அதேபோல பால்கோவாவிற்கும் புகழ்பெற்ற ஊர். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் 7 பெண்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், 38 பொது பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், ஆகமொத்தம் 45 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இதில் காடனேரி மகளிர் கூட்டுறவுச் சங்கம், தம்பிபட்டி மகளிர் கூட்டுறவுச் சங்கம், ய. புதுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், மேலகோடாங்கிப்பட்டி பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம், இதுபோன்ற 7 சங்கங்கள் இன்றைக்கு செயல்படாத நிலையில் இருக்கின்றன. மேலும், ய. புதுப்பட்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் இன்றைக்கு ஊழியர்கள் இல்லாமல் அந்தச் சங்கம் பூட்டப்பட்டு இருக்கிறது. எனவே, ஊழியர்களை நியமனம் செய்ய வேண்டும். அதேபோல் தளவாடச் சாமன்கள் புதிகாக வழங்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இருக்கின்ற அந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைத்து, செயல்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 மே 7]

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்கிட ஒவ்வோர் ஆண்டும் 1,500 புதிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் அமைக்கவும் மற்றும் நலிவடைந்த சங்கங்களைப் புதுப்பிக்கவும் ஆணையிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், இன்று ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள 35 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 11,385 லிட்டரில் 7,210 லிட்டர் பால் உள்ளூர் விற்பனையாக மேற்கொள்ளப்பட்டு, மீதமுள்ள 4,175 லிட்டர் பால் விருதுநகர் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் பால் பண்ணைகளிலிருந்து அனுப்பப்படுகிறது. இதிலே, 42 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில், 7 சங்கங்கள் செயலிழந்துள்ளன. அதில் இரண்டு சங்கங்களுக்கு பிப்ரவரி 2013–ல் புத்துயிர் ஊட்டப்பட்டுள்ளது. எஞ்சிய 5 சங்கங்களுக்கான பணிகளும் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும். தீவிர பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் இவையெல்லாம் செயல்படச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மானியத்துடன்கூடிய வங்கிக் கடன் யாருக்கும் வழங்கப்படாததன் காரணமாக, தற்போது பால் உற்பத்தியாளர் அனைவரும் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொடர்பு இல்லாதவர்களாக உள்ளனர். எனவே, கறவை மாடுகள் வாங்க, வங்கிக் கடன் வழங்கப்பட வேண்டும். ஊழியர்களை நியமனம் செய்து, தீவனங்களை குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இறக்குவதைத் தவிர்த்து, அனைத்துச் சங்கங்களிலும் இறக்கிட நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல் கட்டடங்களை புனரமைத்து, தளவாடச் சாமான்களை வழங்கி, ஆவின் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்குவதைப்போல சம்பளத்தை வழங்கி, நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களைப் புனரமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களாக விளங்கக்கூடிய விவசாயிகளுடைய வாழ்வாதாரம் உயர்த்தப்பட வேண்டுமென்பதற்காக வங்கியின் மூலமாக கடன் உதவி பெறுகின்றவர்களுக்கு மானியம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் இன்று, விலையில்லாமல் கறவை மாடுகள் அந்த விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு, பால் உற்பத்தி இன்று பெருகிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாது, நலிவடைந்த பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் புதுப்பிக்கப்படாத கட்டடங்கள் புதுப்பிக்கப்படுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.*

அதுமட்டுமல்லாது, கால்நடைத் தீவனங்கள் கால்நடைகளுக்குச் சேர வேண்டுமென்பதற்காக இன்று வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு கிலோவிற்கு 4 ரூபாய் வீதம் டெல்டா மாவட்டங்களுக்கு மட்டும் 15 கோடி ரூபாயை அறிவித்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாது, மற்ற மாவட்டங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் கால்நடைத் தீவனத்திற்கு மானியம் வழங்கி இருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பால் உற்பத்தியானது தமிழகத்தில் பெருகவேண்டும். சுத்தமான, சுகாதாரமான, ஆரோக்கியமான பால் மக்களுக்குக் கிடைக்க வேண்டும், அதுமட்டுமல்லாது, விவசாயிகளுடைய வாழ்வாதாரம் பெருகவேண்டும், அந்த விவசாயிகளுடைய வாழ்க்கையில் மகிழ்ச்சி உருவாக வேண்டுமென்பதற்காக தமிழகத்தினுடைய முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் பல திட்டங்களை மேற்கொண்டு, இந்த விவசாயிகளுடைய வாழ்விலே மலர்ச்சியை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)